கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். திருமங்கலம்

08.02.2023

**அசல் வழக்கு எண். 148/2020**

**வா.சா. 2 – ஜெயப்பாண்டி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**ஆரம்பித்த நேரம் : 11.35 AM**

வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். அவர் பெயர் என்ன என்று கேட்டால ஆலமரத்தான் விருமாண்டி ஆகும். அவரது மகன் விருமாண்டி இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்ற விபரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியும். வாதிக்கும், பிரதிவாதிக்கும் மேலக்குயில்குடி கிராமத்தில் உள்ள தாவா சொத்தின் சர்வே எண், நான்குமால், பரப்பளவு தெரியுமா என்று கேட்டால் நான்குமால் விபரம் தெரியும், சர்வே எண், பரப்பளவு விபரம் பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு தாவா சொத்து பாத்தியம் என்பதைக் காட்டக்கூடிய ஆவணங்களை வாதி காண்பித்து நான் பார்த்துள்ளேனா என்று கேட்டால் பார்த்ததில்லை. நான் யார் விவசாயக்கூலிக்கு கூப்பிட்டாலும் செல்வேன் என்று சொன்னால் சரிதான். அந்த விவசாய நிலங்களுக்கான ஆவணங்களை பார்த்து நான் கூலிக்கு சென்றதில்லை என்று சொன்னால் சரிதான். நான் உழவடை செய்த தாவா சொத்தினை ஆலமரத்தான் என்ற விருமாண்டி யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்று கேட்டால் தெரியாது. நான் சிறுவயதாக இருக்கும்போது வாங்கப்பட்ட சொத்தாகும். தாவா சொத்தை நான் எப்பொழுது உழவடை செய்தேன் என்று கேட்டால் 45 வருடத்திற்கு முன்பாக உழவடைக்கு சென்றேன். தற்போது வரை உழவடை செய்து வருகிறேன். தாவா சொத்து யாருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்று கேட்டால் தெரியாது. தாவாச் சொத்து கழுவத்தேவர் மகன்கள் கருத்தக்கண்ணன், முத்துவிருமாண்டி, மாயாண்டித்தேவர் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்று சொன்னால் எனக்கு தெரியாது. தாவாச்

சொத்து கிரையச் சொத்தா, அடமானம் பெற்ற சொத்தா, பூர்வீக சொத்தா என்ற விபரம் தெரியுமா என்று கேட்டால் கிரையச் சொத்து என்று சொல்வார்கள். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் ஆலமரத்தான் என்ற விருமாண்டித்தேவர் மற்றும் அவரது மகன் விருமாண்டி ஆகியோர்கள் தாவாச் சொத்தினை தற்போது வரை விவசாயம் செய்து அனுபவம் செய்து வருகின்றனர் என்பதை நான் ஆவணத்தின் அடிப்படையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். விருமாண்டி எனக்கு சொந்தக்காரரா என்று கேட்டால் என் பங்காளி. விருமாண்டி எனக்கு பங்காளி என்பதால் விருமாண்டிக்கு பாத்தியமில்லாத சொத்தினை விருமாண்டிக்கு பாத்தியம் என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**முடிவடைந்த நேரம் : 11.45 AM**